பக்கங்கள்: 10
# காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு
சாயல் 01 | வள்ளுவர் ஆண்டு 2051 | ஆடி 21 | புதன்கிழமை | 05.08.2020 | கதிர் 140

## தேர்தல் கண்காணிப்பில் 2, 200 பேர் ஈடுபட்டனர்!

கொழும்பு, ஓக. 05

நாடு முழுவதும் தேர்தல் கண்காணிப் புப் பணிகளில் 2,200 கண்காணிப்பாளர் கள் ஈடுபடுத்தப்பட்டனர் என கபே அமைப்பு தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மனாஸ் மக்கீன் இதனைக் குறிப்பிட்டார்.

2

# வன்முறையற்ற பொதுத்தேர்தல்

### நாளை காலை வாக்கெண்ணும் பணி ஆரம்பம்
### யாழ். மாவட்டத்தில் 67.72 சதவீதம் வாக்களிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 05

இலங்கையின் 9 ஆவது நாடாளுமன்றத் துக்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற் கான பொதுத் தேர்தல் இன்று வன்முறைகள் இன்றி நடைபெற்றது.

காலை 7 மணிக்கு ஆரம்பமான பொதுத்தேர் தலுக்கான வாக்களிப்பு மாலை 5 மணிக்கு நிறை வடைந்தது.

2

## இறுதி நேரத்தில் வாக்களித்த சஜித்



கொழும்பு, ஓக. 05

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் அதன் கொழும்பு மாவட்ட வேட்பாளரு மான சஜித் பிரேமதாஸ இறுதி நேரத்தில் வாக்களிப்பு நிலையத்துக்கு வருகை தந்து வாக்களித்து, தனது ஜனநாயகக் கட மையை நிறைவேற்றினார்.

2

## சாவகச்சேரியில் வாக்கு மோசடி; அதிகாரிகள் தீவிர விசாரணை!

யாழ்ப்பாணம், ஓக. 05

சாவகச்சேரி தொகுதியில் வாக்கு மோசடி இடம்பெற்றுள்ளதாகக் கிடைத்த முறைப்பாடுகளையடுத்து அதிகாரிகள் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப் பினரான சாவகச்சேரி நகரசபை தவிசாளர் சிவமங்கை இராமநாதனின் கணவர் இராமநாதன், சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலைக்கு வாக்களிக்கச்

2

## யாழ்ப்பாணத்தில் இன்று சுமூகமான வாக்களிப்பு!

### பெட்டிகள் பாதுகாப்பாக வந்தன



யாழ்ப்பாணம், ஓக. 05

யாழ். மாவட்டத்தில் சுமூகமான முறையில் பொதுத் தேர்தல் வாக்களிப்பு நிறைவடைந்த நிலை யில் வாக்குப்பெட்டிகள் யாழ்ப்பாணம் மத்திய கல் லூரியில் உள்ள வாக்குகள் எண்ணும் மத்திய நிலையத்துக்கு எடுத்து வரப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தில் 4 லட்சத்து 79 ஆயிரத்து 848 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

இவற்றில் தபால்மூல வாக்களிப்பு நீங்கலாக 4 லட்சத்து 58 ஆயிரத்து 345

2

## கிளிநொச்சி மாவட்டத்தில் 71.52 வீதம் வாக்களிப்பு



கிளிநொச்சி மாவட்டத்தில் மொத்த வாக்களிப்பு 71.52 வீத மாகும். காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை சுமுகமாக இடம்பெற்ற வாக்களிப்பில் பதிவு செய்யப்பட்ட 92,264 மொத்த வாக்காளர்களில் 65,984 பேர் வாக்களித்துள்ளனர் என மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இன்று மாலை 107 வாக் களிப்பு நிலையங்களிலிருந்து வாக்குப் பெட்டிகள் பொலீஸ் பாது காப்புடன் பழைய கச்சேரி வளா கத்திற்குள் எடுத்துவரப்பட்டுள் ளன.

## நாடு முழுவதிலும் 70% வாக்குப் பதிவு

கொழும்பு, ஓக. 05

2020 பொதுத் தேர்தலில் நாடுமுழுவதும் 70 வீத வாக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலை வர் மஹிந்த தேசப்பிரிய அறிவித்துள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த அவர், நாடாளுமன்றத் தேர்தலில் பாரியளவிலான தேர்தல் மீறல்கள் எதுவும் பதிவாகவில்லை எனவும் கூறினார்.

இருப்பினும் சில சிறிய வன்முறைச் சம்ப வங்கள் தொடர்பாக பொலிஸார் விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் தேசப்பிரிய குறிப்பிட்டார்.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# இருவர் வாக்களிப்பதற்கு ஒரு வாக்களிப்பு நிலையம்

மட்டக்களப்பில் இருவர் வாக்களிப்பதற்காக வாக்களிப்பு நிலையத்துக்கு இன்று வாக்குப்பெட்டிகள் எடுத்துச் செல்லப்பட்டு வாக்களிப்பு நடைபெற்றது.

மாந்தீவு தொழுநோயாளர் வைத்தியசாலைக்கு இன்று காலை வாக்குப்பெட்டி எடுத்துச் செல்லப்பட்டது. படகு மூலம் வாக்குப்பெட்டியும் வாக் குச்சீட்டுகளும் கொண்டு செல்லப்பட்டன.

இரண்டு வாக்காளர்களாக உள்ள தொழு நோயாளர்கள் வாக்களிப்பதற்காக பத்துக்கும் மேற்பட்ட அதிகாரிகளும் பொலிஸாரும் அங்கு சென்று வாக்களிப்பை நடத்தினர்.

# மன்னாரில் 79.49 %

மன்னார் மாவட்டத்தில் அமைதியான முறையில் இன்று புதன் கிழமை நாடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்களிப்பு இடம் பெற்றது.

மாவட்டத்தில் உள்ள அனைத்து வாக்களிப்பு நிலையங்களிலும் இன்று புதன் கிழமை காலை 7 மணிமுதல் மாலை 5 மணி வரை வாக் களிப்பு இடம்பெற்றது.

மன்னார் மாவட்டத்தில் 79.49 வீத வாக்கு பதிவானது.

மன்னார் மாவட்டத்தில் இம்முறை 88 ஆயிரத்து 842 வாக்களர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றனர். அவர்களில் புத்தளத்தில் இடம்பெயர்ந்த 5 ,807 வாக்களர்களுக்கு புத்தளத்தில் வாக்களிக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வாக்களிப்பு இடம் பெற்றது.

புத்தளத்தில் 12 விசேட வாக்களிப்பு நிலையங்களில் இடம் பெயர்ந்த மன்னார் மாவட்ட வாக்களர்கள் வாக்களித்துள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் 5 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் 76 வாக் களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டு வாக்களிப்பு இடம் பெற்றது.

# மாவட்டங்களில் வாக்களிப்பு வீதம்

| | |
|---|---|
| கொழும்பு | - 68 சதவீதம் |
| கம்பஹா | - 68 சதவீதம் |
| குருநாகல் | - 65 சதவீதம் |
| அம்பாந்தோட்டை | - 76 சதவீதம் |
| பொலனறுவை | - 72 சதவீதம் |
| மாத்தறை | - 70 சதவீதம் |
| மாத்தளை | - 72 சதவீதம் |
| கேகாலை | - 70 சதவீதம் |
| பதுளை | - 65 சதவீதம் |
| அநுராதபுரம் | - 70 சதவீதம் |
| கண்டி | - 72 சதவீதம் |
| நுவரெலியா | - 75 சதவீதம் |
| காலி | - 70 சதவீதம் |
| இரத்தினபுரி | - 72 சதவீதம் |
| புத்தளம் | - 65 சதவீதம் |
| களுத்துறை | - 65 சதவீதம் |
| மொனராகலை | - 73 சதவீதம் |
| அம்பாறை | - 73 சதவீதம் |
| வன்னி | - 74 சதவீதம் |
| மட்டக்களப்பு | - 76 சதவீதம் |
| திருகோணமலை | - 74 சதவீதம் |

## வன்முறையற்ற ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொரோனா வைரஸ் பரவல் அச்சுறுத்தலால் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றியே வாக்களிப்பு இடம் பெற்றது.

22 தேர்தல் மாவட்டங்களில் இருந்தும் வாக்களிப்பதற்கு ஒரு கோடியே 62 இலட்சத்து 63 ஆயிரத்து 885 பேர் தகுதி பெற்றிருந்தனர்.

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் 67.72 சதவீதமான வாக்குகள் பதிவாகியுள்ளன. அதற்கமைய 3 இலட்சத்து 24 ஆயிரத்து 770 பேர் வாக்களித்துள்ளனர். அவர்களில் வாக்களிப்பு நிலையங்களில் 3 இலட்சத்து 3 ஆயிரத்து 941பேரும், தபால் மூலம் 20 ஆயிரத்து 829 பேரும் வாக்களித்துள்ளனர்.

வாக்களிப்பு மாலை 5 மணிக்கு முடிவடைந்ததையடுத்து வாக்குப்பெட்டிகள் 'சீல்' வைக்கப்பட்டு பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் வாக்கெண்ணும் நிலையங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

நாளை காலை 7 மணி முதல் வாக்கெண்ணும் பணி ஆரம்பமாகும். மாலை 4 மணிக்குள் முதலாவது முடிவு வெளிவரும் எனவும், நள்ளிர வுக்குள் இறுதி முடிவு வெளியாகும் எனவும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## யாழ்ப்பாணத்தில் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாக்காளர்களுக்காக 508 வாக்க ளிப்பு நிலையங்களில் வாக்களிப்புகள் இடம் பெற்றன.

இன்றைய தினம் 67.72 சதவீத வாக்களிப்பும் தபால்மூல வாக்களப்பு 98.02 சதவீதம் இடம்பெற்றுள்ளது. அதனால் யாழ்ப்பாணத்தில் 67.71 சதவீத வாக்களிப்பு இடம்பெற்றுள்ளது.

வழமை போன்று யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலேயே வாக்கு எண்ணும் பணிகள் நாளை நடைபெறும்.

சீரற்ற காலநிலை நிலவுவதனால், நெடுந்தீவில் இருந்து உலங்கு வானூர்தி மூலம் வாக்குப் பெட்டிகள மத்திய கல்லூரிக்கு எடுத்து வரப்பட் டன. எழுவைதீவு மற்றும், அனலை தீவு உள்ளிட்ட தீவுகளில் இருந்து கடற்படையின் பாதுகாப்புடன், வாக்குப் பெட்டிகள் எடுத்து வரப்பட்டன.

## இறுதி நேரத்தில் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீரவில குடாகம்மான இலக்கம் 7இல் அமைந்துள்ள அபயபுர - சுரனிமல தொடக்கக் கல்லூரியில் அமைக்கப்பட்டிருந்த வாக்களிப்பு நிலையத்துக்கு, இன்று மாலை 4.45 மணியளவில் சஜித் தனது மனைவியுடன் சென்று வாக்களித்தார்.

சஜித் பிரேமதாஸ வாக்களிப்பு இடம் பெற்ற பகுதிக்கு அருகில், காலை 7 மணியளவில் வருகை தந்து தங்கியிருந்த போதிலும் வாக்கெடுப்பு முடிவடையும் தருணத்திலேயே வாக்களிப்பு நிலையத்துக்குச் சென்று வாக்களித்துள்ளார்.

## தேர்தல் கண்காணி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவிக்கையில் -

நடைபெறும் பொதுத்தேர்தலில் நடமாடும் கண்காணிப்புப் பணிகளுக்காக 80 இற்கும் அதிகமான வாகனங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை, திகாமடுல்ல மற்றும் கல்முனை ஆகிய பிரதேசங்களில் 2 வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

கல்முனையில் நேற்று இரவு கட்சியொன்றின் ஆதரவாளர் மீது தாக்குதல் இடம்பெற்றுள்ளதைப் போன்று, திகாமடுல்ல பிரதேசத்தில் இன்று காலை, கட்சி ஆதரவாளர் ஒருவர் தாக்கப்பட்டுள்ளார்-என்றார்.

## சாவகச்சேரியில் வாக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சென்றிருக்கின்றார்.

இதன்போது அங்கு, அவர் ஏற்கனவே வாக்களித்தார் எனப் பதிவாகியிருப்பதாகக் கடமையில் ஈடுபட்டிருந்த அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர்.

இதனால் இவ்விடயம் தொடர்பாக தேர்தல்கள் திணைக்கள அதிகாரிகள், பொலிஸார் மற்றும் கட்சிப் பிரமுகர்கள் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டதால் விசாரணைக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் வாக்கு மோசடிகள் பரவலாக இடம்பெற்றுள்ளதா என்று சந்தேகம் எழுந்துள்ளதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.



நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000

மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# திருந்துமா தரப்புக்கள்?

**2020 பொதுத் தேர்தலின் மிக முக்கிய கட்டம் நடந்தேறிவிட்டது. வாக்களிப்பு பெருமளவில் சுமுகமாகவும் வன்முறையின்றியும் அமைதியாகவும் இடம்பெற்றுள்ளது.**

**நாளையும் மறுதினமும் வாக்கெண்ணும் பணி மிச்சமிருக்கின்றது. கட்சிகளின் நிலைவரம் நாளை மதியத்துக்குப் பின்னர் தெளிவாகும். வேட்பாளர்களின் தலையெழுத்து – இறுதி முடிவு – நாளை மறுதினம் தெளிவாகும்.**

**எனினும், களத்தில் உள்ள வேட்பாளர்களில் கணிசமானோரின் தலைவிதி நாளை கட்சிகளின் நிலைமை தெளிவாகும் போது வெளிப்பட்டு விடும். எஞ்சியோர்தான் அடுத்த நாள் விருப்பு வாக்குப் பந்தய ஓட்டத்தின் முடிவுக்குக் காத்திருக்க வேண்டியிருக்கும்.**

**தமிழர் தரப்பை பொறுத்தவரை – குறிப்பாக வடக்கு, கிழக்கில் – 'மாற்று'க் குறித்துத்தான் அதிகம் பேசப்பட்டது.**

**'மாற்று' என்ற மாற்றம் உண்டா என்பது நாளை மதியமளவில் ஓரளவு தெளிவாகியிருக்கும்.**

**எது, எப்படி என்றாலும், தேர்தல் வாக்கு எண்ணிக்கை முடிவு வருவதற்கு முன்னர் சில விடயங்களைச் சுட்டிக்காட்டுவது கட்டாயம் என்று நினைக்கின்றோம்.**

**முன்னெப்போதும் இல்லாதவாறு இம்முறை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மிக அதிகளவான எதிர்ப்பைச் சந்தித்துள்ளது – சம்பாதித்துள்ளது – என்பது உண்மை.**

**நாளைக்கு வாக்கு எண்ணிக்கை பற்றிய அட்சர கணிதத்தில் அது வெளிப்படலாம். அல்லது வெளிப்படாமலும் போகலாம். அதுவல்ல விடயம்.**

**முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு கூட்டமைப்புக்குள் பிளவும், அணி மோதலும், முரண்பாடுகளும், குத்துவெட்டுகளும், குளறுபடிகளும், உள்கட்சி மோதலும் உச்சத்தில் இருக்கின்றன என்ற கருத்து மக்கள் மனதில் ஆழ வேரோடும் நிலைமை இந்தத் தேர்தல் காலத்தில் இருந்தது.**

**அதன் பெறுபேறை மக்கள் இந்தத் தேர்தல் சமயத்தில் தமது மனதில் உள்வாங்கினரா, தங்களின் வாக்களிப்பில் அதை வெளிப்படுத்திக் காட்டினரா என்பவை எல்லாம் நாளைதான் தெரியும்.**

**ஆனால், கூட்டமைப்புக்குள் பெருங்குழப்பம் ஏற்பட்டிருப்பது போலவும், அதனால் இந்த முறை 'வீட்டைக் கைவிட்டு' மாற்றைச் சிந்திக்கலாம் என்ற எரிச்சல் மனநிலை பலர் மனதில் ஏற்பட்ட மாதிரியும், ஒரு கணக்கீட்டை நோக்கர்கள் அவதானிக்கும் நிலைமை இருந்தது.**

**இந்த வாக்கெடுப்பில் அது பிரதிபலிக்குமா என்பது தெரியவில்லை. சில சமயம் பிரதிபலிக்கக் கூடும்.**

**ஆனால், இவ்வாறு உள்கட்சி மோதல், கூட்டமைப்புக்குள் குழப்பம் என்ற சிந்தனை மக்கள் மத்தியில் வேரோடியமைக்கான காரணத்தைக் கூட்டமைப்புத் தலைமை தேடிக் கண்டறியத் தவறுமானால் –**

**இன்று 'மாற்று' வரத் தவறினாலும் – அல்லது தெளிவான 'மாற்று' வலுவான சக்தியாக மேலெழாவிட்டாலும் – அது உருவாவது வரலாற்றின் கட்டாயமாகும் என்பதுதான் நிதர்சனமாகும்.**

**கூட்டமைப்பைப் பொறுத்தவரை தன்னுடைய பிரசாரத்துக்கு வசதி என்று அதன் தலைமை வரித்துக் கொண்ட – அரவணைத்துக் கொண்ட – பிரசார இயந்திரம்தான் அதன் இன்றைய தலைகுனிவு நிலைக்குப் பிரதான காரணம் என்பதைக் கூட்டமைப்பின் தலைவர்களான சம்பந்தனும், மாவையும் இனியும் உணரத்**

**தவறுவார்களேயானால், கடவுள் வந்தும் கூட அவர்களின் கூட்டமைப்பைத் தூக்கி நிறுத்த முடியாது என்பதுதான் நிஜம்.**

**'குளிக்கப் போய் சேறு பூசிக் கொண்ட மாதிரி', பிரசார லாபம் பெறலாம் என்று மனப்பால் குடித்து, சம்பந்தனும் மாவையும் அரவணைத்துக் கொண்ட வர்த்தக நிறுவனமே கடைசியில் கூட்டமைப்புக்குள் குழப்பம் என்ற நிரந்தரமான கருத்தை மக்கள் மத்தியில் ஆழ விதைக்கக் காரணமாயிற்று என்ற அனுபவப் பாடத்தை இந்த இருவரும் இன்னும் படிக்கவில்லையாயின் அவர்களின் இந்த நீண்ட கால அரசியல் பட்டறிவு பூச்சியத்துக்கு ஒப்பானதாகி விடும்.**

**தேர்தல் முடிவுகள் எப்படியும் வரலாம். அதிலிருந்து பாடங்களைக் கற்றுக் கொண்டு முன் நகர்வதுதான் அரசியல் கட்சிக்குச் சிறப்பு.**

**பழையதையே கட்டிப் பிடித்துக் கொண்டு மாரடிப்பதால் பயனேதும் கிட்டப் போவதில்லை.**

**புதிய சிந்தனை, புதிய போக்கு, புதிய மாற்றம் என்ற மாற்றங்களோடு பயணிக்க அரசியல் கட்சிகள் தயாராக வேண்டும்.**

**நாளை கிடைக்கப் போகும் தேர்தல் முடிவுகள் தரப்புகளுக்கு – அரசியல் கட்சிகளுக்கு – இந்தப் பாடத்தைப் புகட்டும் என்று நம்பலாம்.**

# 11 வருடங்களின் பின் வாக்களித்த மஹிந்த

கொழும்பு, ஓக.05

தேர்தல்கள் ஆணைக்குழுவின் மஹிந்த தேசப்பிரிய, 11 வருடங்களின் பின்னர் இன்று நடைபெறும் நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களித்துள்ளார்.

கடந்த 2011இல் தான் இறுதியாக வாக்களித்தார் எனவும் அவர் கூறியுள்ளார்.

இன்று பம்பலப்பிட்டியிலுள்ள லிண்ட்சே மகளிர் கல்லூரி வாக்குச்சாவடியில் வாக்களித்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றுக்கு மத்தியில் இம்முறை தேர்தல் இடம்பெறுவதால் மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை. 65 வயதான நான் வாக்குச்சாவடிக்கு வந்து வாக்களித்துள்ளேன். வாக்களிப்பு நிலையங்கள் மிகவும் பாதுகாப்பாக அமைக்கப்பட்டுள்ளது என்பதை மக்களுக்குத் தெரிவிக்கவே நான் இம்முறை வாக்களித்தேன்.

இன்று நடைபெறும் பொதுத்தேர்தலில், மக்கள் தங்களது ஜனநாயக உரிமையைப் பயன்படுத்த வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

# மீனவர்களுக்கு எச்சரிக்கை!

பலத்த காற்று மற்றும் கடல் கொந்தளிப்பு தொடர்பாக வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதற்கமைய, காங்கேசன்துறை முதல் மன்னார், கொழும்பு மற்றும் காலி ஊடாக அம்பாந்தோட்டை வரையான கடல் பிரதேசங்களில் காற்றின் வேகம் அவ்வப்போது மணிக்கு 60 – 70 முதல் கிலோமீற்றர் வரை அதிகரித்துக் காணப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த கடல் பிரதேசங்களில் மீன்பிடி நடவடிக்கைகள் ஆபத்தானது எனவும், இது தொடர்பாக கடல் தொழிலில் ஈடுபடுவோர் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடல் பிரதேசங்கள் அவ்வப்போது கொந்தளிப்பாகக் காணப்படும். பேருவளை முதல் காலி ஊடாக அம்பாந்தோட்டை வரையான கடற்கரை பிரதேசங்களில் கடல் அலை 2 தொடக்கம் 2.5 மீற்றர் வரை உயர்வடையக் கூடும். கடல் அலை நிலப்பிரதேசத்தை நோக்கி வரும் வாய்ப்புள்ளது எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# தபால் மூல பெறுபேறுகள் நாளை பிற்பகலுக்கு முன்

தபால் மூல வாக்களிப்பின் தொகுதி மட்டத்திலான முதலாவது உத்தியோக பூர்வ பெறுபேற்றை நாளை நண்பகல் 12 மணிக்குப் பின்னர் வெளியிடக்கூடியதாக இருக்கும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பொதுத் தேர்தலில் தபால் மூலம் அளிக்கப்பட்ட வாக்குகளை எண்ணும் பணி 66 மத்திய நிலையங்களில் நாளை காலை 7 மணிக்கும் 8 மணிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் ஆரம்பமாகவுள்ளது.

இதேவேளை, இறுதித் தேர்தல் பெறுபேறுகள் நாளை நள்ளிரவுக்கு முன்னர் வழங்கக்கூடியதாக இருக்கும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

விருப்பு வாக்கு பெறுபேறுகள் நாளைமறுதினம் நள்ளிரவுக்கு முன்னர் முழுமையாக வெளியிடக்கூடியதாக இருக்கும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# பாதாளக் குழுவைச் சேர்ந்த 'லொக்கா' சுட்டுக்கொலை!

## கார் தீப்பிடிப்பு



பாதாள உலகக் குழுவைச் சேர்ந்த எஸ்.எவ். லொக்கா என அழைக்கப்படும் இரோன் ரணசிங்க சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

அநுராதபுரத்தின் தம்புத்தேகம, தஹய்யாகம சந்தியில் இன்று காலை மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் அவர் உயிரிழந்துள்ளார்.

இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தைத் தொடர்ந்து அவர் பயணித்த காரும் தீப்பிடித்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர், அநுராதபுரம், கடபனஹவிலுள்ள பனோரமா இரவு விடுதியின் உரிமையாளரும் கராத்தே வீரருமான வசந்த சொய்சா கொலை வழக்கின் பிரதான சந்தேகநபராவார்.

கராத்தே வீரரான வசந்த சொய்சா கடந்த 2015ஆம் ஆண்டு ஒக்டோபர் 24ஆம் திகதி அவரது விடுதியில் வைத்து அடித்துப் படுகொலை செய்யப்பட்டிருந்தார். இந்தச் சம்பவத்தில் தொடர்புடைய பலர் ஏற்கனவே கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

# இலங்கையரை அழைத்துவரும் செயற்பாடுகள் மீள ஒத்திவைப்பு

கொழும்பு, ஓக.05

வெளிநாடுகளிலுள்ள இலங்கையரை நாட்டுக்கு அழைத்துவரும் செயற்பாடுகள் மீண்டும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன. இன்று நடைபெறும் பொதுத் தேர்தலை முன்னிட்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இந்த நடவடிக்கைகள் எதிர்வரும் 08 ஆம் திகதி முதல் மீண்டும் ஆரம்பிக்கப்படும்.

– இவ்வாறு ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் அட்மிரல் ஜயநாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில், எதிர்வரும் 08 ஆம் திகதி டுபாயிலுள்ள 660 இற்கும் மேற்பட்ட இலங்கையர் நாட்டுக்கு அழைத்து வரப்படவுள்ளனர் எனவும் அவர் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

மாலைதீவு, ஆஸ்திரேலியா, கட்டார், ஓமான், பஹ்ரேய்ன், மலேசியா, சிங்கப்பூர், இந்தியா உள்ளிட்ட நாடுகளில் சிக்கியுள்ள இலங்கையரை நாட்டுக்கு அழைத்துவர தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பொதுத் தேர்தல் கடமைகளில் பாதுகாப்புப் பிரிவின் உறுப்பினர்கள் மற்றும் சுகாதார அதிகாரிகள் ஆகியோர் ஈடுபடவுள்ளதால் வெளிநாடுகளிலுள்ள இலங்கையரை நாட்டுக்கு அழைத்துவரும் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. ஆனால், எதிர்வரும் 08 ஆம் திகதி முதல் மீண்டும் ஆரம்பிக்கப்படும் – என்றார்.



# அமெரிக்காவில் கட்டுக்கடங்காமல் பரவும் கொரோனா வைரஸ் தொற்று

அமெரிக்காவில் கொரோனா வைரஸ் தொற்று மீண்டும் கட்டுக் கடங்காமல் பரவி வருகிறது.

நேற்று ஒரே நாளில் 54 ஆயிரம் பேருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டதால், இதுவரை அங்கு பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 50 லட்சத்தை நெருங்கியுள்ளது. கடந்த 24 மணி நேரத்தில் ஆயிரத்து 300 க்கும் மேற்பட்டவர்கள் வைரஸ் தொற்றினால் உயிரிழந்தமையால் இதுவரை அங்கு மரணித்தவர் எண்ணிக்கை ஒரு லட்சத்து 60 ஆயிரத்தை தாண்டியுள்ளது.

இதுவரை அந்நாட்டில் 24 லட்சத்து 81 ஆயிரம் பேர் சிகிச்சை முடிந்து திரும்பியுள்ள நிலையில் 22 லட்சத்து 76 ஆயிரம் பேர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்களில் 18 ஆயிரத்து 500 பேர் உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# தீவிரவாதத் தாக்குதலை போல பெய்ரூட் வெடி விபத்து உள்ளது

## அமெரிக்க அதிபர் டிரம்ப் கருத்து





லெபனானின் தலைநகர் பெய்ரூட்டில் ஏற்பட்ட வெடி விபத்தை பார்த்தால் அது ஒரு தீவிரவாத தாக்குதலை போல இருக்கிறது என அமெரிக்க அதிபர் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

அது ஒரு குண்டு வெடிப்பாக இருக்கலாம் எனத் தமது இராணுவ ஜெனரல்கள் தம்மிடம் தெரிவித்தனர் என வெள்ளைமாளிகையில்செய்தியாளர்களிடம் டிரம்ப் கூறினார். ஏதோ உற்பத்தி கூடத்தில் ஏற்பட்ட விபத்து போல தெரியவில்லை என்ற அவர், அனுபவம் வாய்ந்த தமது இராணுவ ஜெனரல்கள் அதை ஒரு தாக்குதல் என்றே கூறினர் எனவும் தெரிவித்தார். லெபனான் மக்களுக்கு உதவத் தாம் தயாராக இருக்கிறார் எனவும் அவர் கூறினார்.

பெய்ரூட்டின் துறைமுகப் பகுதியில் உள்ள கிட்டங்கியில் பல ஆண்டுகளாக இருப்பு வைக்கப்பட்டிருந்த 2,650 தொன் அம்மோனியம் நைட்ரேட் வெடித்துச் சிதறியதாக லெபனான் பிரதமர் ஹசன் தயாப் தெரிவித்துள்ளார். இதில் 80பேர் கொல்லப்பட்டதுடன் 4,000 பேர் காயமடைந்தனர்.

# தென்கொரியாவில் கனமழை வெள்ளத்திற்கு 15 பேர் பலி!



சியோல்,ஓக.05

தென் கொரியாவில் கனமழையால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் சிக்கி 15 பேர் பலியாகியுள்ளனர்.

தென்கொரியாவில் கடந்த சில நாள்களாக பலத்த மழைபெய்தநிலையில், வெள்ளப்பெருக்குஏற்பட்டுள்ளது. இதில் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும், சுமார் 1,300 வீடுகள் நீரில் மூழ்கியுள்ளன. அதே நேரத்தில் 705 களஞ்சியங்கள் மற்றும் கால்நடை கொட்டகைகளிலும் சேதம் ஏற்பட்டுள்ளது.

கனமழை காரணமாக 5,000 ஹெக்டருக்கும் மேற்பட்ட விவசாய நிலம் நீரில் மூழ்கியுள்ளது. தலைநகர் சியோலில் உள்ள முக்கிய நெடுஞ்சாலைகள், பாலங்கள் ஆகியவற்றின் சில பகுதிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

தென் கொரியா அரசு 45,000க்கும் மேற்பட்ட மீட்பு படைகள் மற்றும் தன்னார்வத் தொழிலாளர்களையும் நியமித்துள்ளது. இந்தக் கனமழையால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் சுமார் 15 பேர் இதுவரை உயிரிழந்துள்ளனர். மேலும், 11-க்கும் மேற்பட்டோர் காணாமல் சென்றுள்ளனர் என மத்திய பேரிடர் மற்றும் பாதுகாப்பு ஆணையம் தெரிவித்துள்ளது.

# அயோத்தி ராமர் கோயில் அமைப்பு அமெரிக்காவில் கொண்டாட்டம்



வொஷிங்டன்,ஓக.05

அயோத்தியில் ராமர் கோயில் பூமி பூஜை விழாவை அமெரிக்க வாழ் இந்தியர்கள் கொண்டாடி மகிழ்ந்தனர்.

அயோத்தியில் பல்வேறு சட்டப் போராட்டங்களுக்குப் பிறகு ராமருக்கு கோயில் கட்டுவதற்கான அனுமதியை கடந்த ஆண்டு நவம்பர் மாதம் உச்சநீதிமன்றம் வழங்கியது. இதனை தொடர்ந்து 'ராமஜென்மபூமி தீர்த்த ஷேத்ரா' என்ற பெயரில் மத்திய அரசு அறக்கட்டளை ஒன்றை நிறுவியது. அயோத்தி ராமஜென்மபூமியில் ராமருக்கு பிரமாண்ட கோவில் கட்டுவது என முடிவு செய்து, இந்த அறக்கட்டளை சார்பில் கோவில் கட்டுமான பணிகளுக்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடந்து வருகின்றன.

அதன்படி இன்று ராமர் கோவிலுக்கான பூமி பூஜையும், அடிக்கல் நாட்டு விழாவும் நடந்தன. இந்த விழாவில் பிரதமர் நரேந்திர மோடி உள்பட முக்கிய பிரபலங்கள் பலர் கலந்து கொண்டனர். இந்த விழாவை முன்னிட்டு பல்வேறு இந்து மதத் தலைவர்களும், அரசியல் கட்சியினரும் தங்கள் வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில் அமெரிக்க தலைநகர் வொஷிங்டனில், அயோத்தி ராமர் கோயில் பூமி பூஜை விழாவை கொண்டாடும் விதமாக, அங்கு வாழும் இந்தியர்கள் பலர் திரண்டு வந்திருந்தனர். அவர்கள் தங்கள் கைகளில் காவிக் கொடிகளை ஏந்தியவாறு ராமரைப் போற்றி கோஷங்களை எழுப்பினர். மேலும் பூமி பூஜை விழாவிற்கு அமெரிக்க வாழ் இந்தியர்களின் வாழ்த்துக்களை தெரிவிக்கும் விதமாக வொஷிங்டன் நகரில் கேபிடல் ஹில் பகுதியில் ஊர்வலமாக சென்றனர்.

சமூக விலகலை கடைப்பிடித்து, முகக்கவசங்கள் அணிந்தபடி ஊர்வலமாக சென்று, அமெரிக்க வாழ் இந்தியர்கள் அயோத்தி ராமர் கோயில் அடிக்கல் நாட்டு விழாவைக் கொண்டாடினர்

# கொரோனாத் தடுப்பு நடவடிக்கைகளில் இந்தியாவுக்கு பின்னடைவு

## டிரம்ப் சர்ச்சைக்குரிய கருத்து

இந்தியாவில் கொரோனா தடுப்பு நடவடிக்கைகளில் பிரச்சினை இருப்பதாக டிரம்ப் சர்ச்சைக்குரிய கருத்து வெளியிட்டிருக்கின்றார்.



கொரோனாவைக் கட்டுப்படுத்த அமெரிக்கா சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும், அதே நேரத்தில் தடுப்பு நடவடிக்கையில் இந்தியா பிரச்சினைகளை சந்தித்து வருவதாகவும் அதிபர் டிரம்ப் கூறியிருக்கின்றமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

வொஷிங்டனில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், உலகிலேயே அதிகளவாக அமெரிக்காவில் 6 கோடிப் பேருக்கு கொரோனா பரிசோதனை செய்யப்பட்டதாக கூறியுள்ளார். இதனால் பாதிப்பு எண்ணிக்கை 6 சதவீதம் அளவுக்கு குறைந்திருப்பதாகவும், கொரோனா தடுப்பில் குறிப்பிடத்தகுந்த முன்னேற்றம் கண்டிருப்பதாகவும் டிரம்ப் தெரிவித்தார்.

அதே நேரத்தில், இந்தியா போன்ற நாடுகள் கொரோனாவைக் கட்டுப்படுத்துவதில் பல்வேறு பிரச்சினைகளைச் சந்தித்து வருகின்றன எனவும், சீனாவில் தொற்று அதிகரித்து வருவதாகவும் டிரம்ப் குறிப்பிட்டார்.

# கொரோனாப் பாதிப்பு உலகில் பல தசாப்தங்களுக்கு நீடிக்கும்

கொரோனாவால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் அடுத்த பல தசாப்தங்களுக்கு நீடிக்கும் என உலக சுகாதார அமைப்பு கவலை தெரிவித்துள்ளது.

உலகளவில் கொரோனா பெருந்தொற்றால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை ஒரு கோடியே 84 லட்சத்தை கடந்துள்ள நிலையில், வைரஸ் பாதிப்பால் 6 லட்சத்து 96 ஆயிரம் பேர் மரணமடைந்துள்ளனர். உலகம் முழுவதும் ஒரு கோடியே 16 லட்சம் பேர் கொரோனா பாதிப்பில் இருந்து மீண்டுள்ளனர்.

அமெரிக்காவில் புதிதாக பாதிக்கப்பட்ட 48,600 பேர் உட்பட 48 லட்சத்து 62 ஆயிரம் பேர் தொற்று பாதிப்புக்கு ஆளாகியுள்ளனர். அங்கு இதுவரை ஒரு லட்சத்து 58 ஆயிரத்து 900 பேர் உயிரிழந்துள்ளனர்.

பிரேசிலில் 27 லட்சத்து 51 ஆயிரம் பேரும், ரஷ்யாவில் 8 லட்சத்து 56 ஆயிரம் பேரும், தென்னாப்பிரிக்காவில் 5 லட்சத்து 16 ஆயிரம் பேரும் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், உலக சுகாதார அமைப்பின் தலைமையகத்தில் அவசர ஆலோசனைக் கூட்டம் அதன் தலைவர் டெட்ரோஸ் அதனோம் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் பேசிய அதனோம் கூறியதாவது:-




கொரோனா குறித்த அறிவியல் பூர்வமான பல கேள்விகளுக்கு இன்னும் விடை கிடைக்கவில்லை என தெரிவித்தார். இதுவரை இல்லாத வேகத்தில் தடுப்பு மருந்தை கண்டுபிடித்தாலும், அந்த மருந்து அனைவருக்கும் சென்றடைய வெகு காலம் ஆகும்.

இந்தத் தொற்றுநோய் ஒரு நூற்றாண்டில் ஒரு முறை வரும் சுகாதார நெருக்கடி. இதன் விளைவுகள் பல தசாப்தங்களுக்கு உணரப்படும் என்றும், அதுவரை கொரோனாவோடு வாழ்ந்து கொண்டே அதனுடன் போராட வேண்டும் என்றும் டெட்ரோஸ் தெரிவித்துள்ளார்.

### 2,750 தொன் அமோனியம் நைட்ரேட் திடீரென

# வெடித்ததில் பெய்ரூட் அதிர்ந்தது! 80 பேர் பலி: 4,000 பேர் படுகாயம்!!




















லெபனானில் சேமிப்புக் கிடங்கில் இருந்த 2,750 தொன்கள் அமோனியம் நைட்ரேட் வேதிப் பொருள் வெடித்ததில் 80 பேர் பலியாகினர். நான்காயிரம் பேர் வரை படுகாயமடைந்தனர்.

லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் உள்ள துறைமுகத்தில் நேற்று பயங்கர வெடிவிபத்து ஏற்பட்டது. இந்த வெடி விபத்தால் அப்பகுதி முழுவதும் தீப் பிழம்புகள் எழுந்தன. கரும்புகை சூழ்ந்தது. வெடிவிபத்து நடந்த சில வினாடிகளில் ஒரேஞ்ச் நிறத்தில் புகைமண்டலமாக பெய்ரூட் துறைமுகப்பகுதி மாறியது.

கட்டடங்கள், வாகனங்கள் சிதறின.

பெய்ரூட் மட்டுமல்லாமல் அந்நகரில் இருந்து 200 கிலோ மீற்றர்கள் தொலைவில் உள்ள தீவுகளிலும் இந்த வெடிவிபத்தின் தாக்கம் உணரப்பட்டது. இந்த வெடிவிபத்தில் தற்போதுவரை 73பேர்உயிரிழந்துள்ளனர். 3ஆயிரத்து 700 பேர் காயமடைந்துள்ளனர் என அந்நாட்டு சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது. இந்நிலையில், துறைமுகத்தில் உள்ள சேமிப்பு கிடங்கில் வைக்கப்பட்டிருந்த மிகவும் ஆபத்து நிறைந்த வெடிக்கக்கூடிய அமோனியம் நைட்ரேட் வேதிப்பொருளால்தான் இந்த கோர விபத்து நடைபெற்றுள்ளதாக லெபனான் பிரதமர் ஹசன் டியப் தெரிவித்துள்ளார்.

இந்த விபத்து குறித்து லெபனான் பிரதமர் கூறுகையில், "எந்தவிதப் பாதுகாப்பு நடைமுறைகளும் பின்பற்றப்படாமல் மக்களுக்கு ஆபத்து தரக்கூடிய வகையில் பெய்ரூட் துறைமுகத்தில் உள்ள சேமிப்பு கிடங்கில் 6 ஆண்டுகளாக 2 ஆயிரத்து 750 தொன் அமோனியம் நைட்ரேட் வேதிப்பொருள் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இதனால்தான் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. இதை ஏற்றுக்கொள்ளவே முடியாது. இந்த பிரச்சினையை சகித்துக்கொண்டு இருக்க மாட்டோம்" என்றார்.



காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# வாக்களித்த அரசியல் பிரமுகர்கள்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ





பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ



இரா. சம்பந்தன்



மாவை சேனாதிராசா



எம்.ஏ.சுமந்திரன்



ரிஷாத் பதியுதீன்



ரணில் விக்கிரமசிங்க



அங்கஜன் இராமநாதன்



மனோ கணேசன்



ரவூப் ஹக்கீம்



டக்ளஸ் தேவானந்தா



கஜேந்திரகுமார் பொன்னம்பலம்



சித்தார்த்தன்



சிவஞானம் சிறீதரன்



சிவாஜிலிங்கம்



கஜதீபன்



# வாக்களித்த அரசியல் பிரமுகர்கள்


ஈஸ்வரபாதன் சரவணபவன்


முருகேசு சந்திரகுமார்


வீ.ஆனந்தசங்கரி


இமானுவேல் ஆனல்ட்


சந்திரிகா குமாரதுங்க


மைத்திரிபால சிறிசேன


சஜித் பிரேமதாஸா


விநாயகமூர்த்தி முரளிதரன்


சாள்ஸ் நிர்மலநாதன்


ப.சத்தியலிங்கம்


சிவசக்தி ஆனந்தன்

# நல்லூரில் இன்று....








காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# அயோத்தி ராமர் கோயிலுக்கு அடிக்கல் நாட்டினார் மோடி..!







பெரும் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் அயோத்தி ராமர் கோவிலுக்கு பிரதமர் நரேந்திர மோடி அடிக்கல் நாட்டியுள்ளார்.

அயோத்தியில் ஸ்ரீராமர் பிறந்தார் என நம்பப்படும் ராம ஜென்மபூமியில் ராமர் கோயில் கட்டுமானப் பணிக்கான பூமி பூஜை இன்று நடைபெற்றது. இதையொட்டி டெல்லியிலிருந்து சிறப்பு விமானத்தில் உத்தர பிரதேச தலைநகர் லக்னோவுக்கு பிரதமர் மோடி இன்று காலை வந்தார். பின்னர் அங்கிருந்து அயோத்திக்கு ஹெலிக்கொப்டரில் பிரதமர் மோடி சென்றார். அங்கு ஹெலிக்கொப்டரில் வந்திறங்கிய அவரை உத்தர பிரதேச முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் நேரில் வரவேற்றார்.

அயோத்தியில் ராமஜென்மபூமிக்கு செல்லும் முன்பு அனுமன் கோவிலுக்கு முதலமைச்சர் யோகி ஆதித்யநாத்துடன் சென்று பிரதமர் மோடி தீப ஆராதனை காட்டி வழிபாடு நடத்தினார். அங்கு பிரதமர் மோடிக்கு தலைப்பாகை, வெள்ளி கிரிடமும், ராமரின் பெயர் பொறித்த சால்வை (விமிலியிள) ஆகியன நினைவுபரிசாக அளிக்கப்பட்டன.

அனுமன் கோயிலைச் சுற்றி வழிபாடு நடத்திவிட்டு, அங்கிருந்து காரில் புறப்பட்டு ராமஜென்மபூமிக்கு பிரதமர் மோடி சென்றார். அங்கு முதலில் அவர் குழந்தை ராமரின் சிலை தற்காலிகமாக வைக்கப்பட்டுள்ள குழந்தை ராமர் கோயிலில் சாஷ்டாங்கமாக தரையில் விழுந்தும், பிறகு தீப ஆராதனை காட்டியும் வழிபாடு நடத்தினார். பின்னர் இந்து மதத்தில் புனிதமானதாக கருதப்படும் பாரிஜாத செடியை பிரதமர் மோடி நட்டு வைத்தார்.

இதையடுத்து அயோத்தி ராமர் கோயில் கட்டுமான பணி பூமி பூஜை சடங்குகளில் பிரதமர் மோடி பங்கேற்றார். இதில் வேத பண்டிதர்கள் மந்திரங்கள் முழங்க செய்த பூஜைகளிலும் அவர் பங்கெடுத்தார். 40 கிலோ வெள்ளி செங்கல்லை எடுத்து வைத்து அடிக்கல் நாட்டி கட்டுமான பணியை பிரதமர் தொடங்கி வைத்தார்.

பூமி பூஜை நிகழ்ச்சியில் பிரதமர், உத்தர பிரதேச ஆளுநர் ஆனந்திபென் படேல், முதலமைச்சர் யோகி ஆதித்யநாத், ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். ராமர் கோவிலுக்கு அடிக்கல் நாட்டப்பட்ட நிலையில் அயோத்தி நகரமே விழாக்கோலம் பூண்டது.





## ராமரின் அருளால் கொரோனா வைரஸ் காணாமல் போகும் என்கிறது சிவசேனா

மும்பை,ஓக.05

ராமரின் அருளால் கொரோனா வைரஸ் காணாமல் போய்விடும் என சிவசேனா கூறியுள்ளது.

அயோத்தியில் ராமர் கோவில் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டு விழா இன்று(புதன்கிழமை) நடந்தது.. இதில் பிரதமர் மோடி கலந்து கொண்டார். இந்த நிலையில் ராமரின் அருளால் கொரோனா வைரஸ் காணாமல் போய்விடும் என சிவசேனா நம்பிக்கை தெரிவித்து உள்ளது.

இது குறித்து சிவசேனா கட்சியின் பத்திரிகையான 'சாம்னா' தலையங்கத்தில் கூறியிருப்பதாவது –

அயோத்தியில் பிரதமர் மோடி அடிக்கல் நாட்டுவது போன்ற பொன்னான தருணம் வேறு எதுவும் இருக்க முடியாது. கொரேனா வைரஸ் இருக்கிறது. ஆனால் ராமரின் அருளால் அது மறைந்துவிடும்.

ராமர் கோவில் கட்டப்படுவதற்கு முக்கிய காரணமாக உள்ள தலைவர்கள் அத்வானி, ஜோஷி ஆகியோர் டெல்லியில் இருந்தபடி காணொலிக் காட்சி மூலம் விழாவில் கலந்துகொள்வார்கள். இதேபோல முக்கிய தலைவரான உமா பாரதியும் நேரடியாக விழாவில் கலந்து கொள்ளவில்லை. அடிக்கல் நாட்டு விழாவால் நாடே மிகவும் ஆவலுடன் உள்ளது.

கொரோனா வைரஸ் அயோத்தி, உத்தரபிரதேசம் மற்றும் ஒட்டு மொத்த நாட்டிலும் பரவி உள்ளது. ஆனால் இந்த பிரச்சினை கடவுள் ராமரின் அருளால் காணாமல் போய்விடும். – இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## மதுரை அருகே இராஜராஜசோழன் காலத்தின் அபூர்வ மகாவீரர் சிற்பம் கண்டுபிடிக்கப்பட்டது



மதுரை, திருமங்கலம் அருகே ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேல் பழமையான மகாவீரர் சிற்பம் மற்றும் இராஜராஜசோழன் காலக் கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கீழடி அகழ்வாராய்ச்சியில் தமிழர்களின் தொன்மையான வரலாற்றுச் சிறப்புகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இதைப் போன்றே மதுரை மாவட்டத்தின் ஒரு பகுதியாக உள்ள மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவார பகுதிகளில் சமீபகாலமாக பல்வேறு தொல்லியல் எச்சங்களை வரலாற்று ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

மதுரை மாவட்டம், திருமங்கலத்தை அடுத்த டி.கல்லுப்பட்டி அருகே காரைக்கேணி பகுதியில் உள்ளது செங்கமேடு. இந்தப் பகுதியில் உள்ள பழமையான சத்திரம் ஒன்றைக் கண்டறிந்த வரலாற்றுத்துறை பேராசிரியர் முனீஸ்வரன் தலைமையிலான குழுவினர் கள ஆய்வு மேற்கொண்டனர். இந்த ஆய்வில், சத்திரத்தின் சுவர்களிலும், அருகில் உள்ள கிணற்றிள் சுவர்களிலும் இராஜராஜசோழனின் கல்வெட்டுகள் மற்றும் பழங் கால தமிழ் வட்டெழுத்துக்களைக் கண்டறிந் துள்ளனர்.

இது குறித்து, வரலாற்றுத் துறைப் பேராசி ரியர் முனீஸ்வரன், தூணில் உள்ள கல்வெட்டு ஒன்று 'அரஹா' என்று தொடங்குகிறது. அரஹா என்பதை சமஸ்கிருதத்தில் உள்ள அருகன் எனக் கொண்டால் இந்தப் பகுதி சமணப்பள்ளி யாக இருந்திருப்பதை அறிய முடிகிறது. இதை உறுதிப்படுத்தும் விதமாக சுமார் ஆயிரம் ஆண்டுகள் பழமையான 24 – ஆவது தீர்த்தங்கரரான மகாவீரர் சிற்பமும் இங்குக் கண்டறியப் பட்டுள்ளது என்றார்.

இந்த சிற்பம் மூன்றடி உயரம், இரண்டு அகலத்தில் உள்ளது. மூன்று சிங்கங்கள் உள்ள பீடத்தின் மேல், சிம்மாசனத்தில் அர்த்த பரியங்க ஆசனத்தில் மகாவீரர் அமர்ந்துள்ளதாகவும், இரு புறமும் இரு இயக்கர்கள் உள்ளனர். பொதுவாக இயக்கிகளுடனே மகாவீரர் சிலை வடிக்கப்படும். ஆனால், இரண்டு பக்கமும் இயக்கர்களுடன் உள்ள இந்த மகாவீரர் சிலை அபூர்வமானதாகும். இந்தப் பகுதியில் ஏராளமா சிதைந்த கட்டடங்களின் செங்கல் குவியல்களும் பானை ஓடுகளும் சிதறிக் கிடக்கின்றன. இந்தப் பகுதியில் விரிவான அகழாய்வு மேற்கொண்டால் மேலும் பல்வேறு வரலாற்றுத் தகவல்கள் கிடைக்கும் என்று வரலாற்று ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்

## கொரோனாவுக்கு இலக்கானார் பாடகர் எஸ்.பி.பாலசுப்பிரமணியம்

### மருத்துவமனையில் அனுமதி

பிரபல பாடகர் எஸ்.பி. பாலசுப்ரமணியமும் கொரோனாத் தொற்றுக்கு இலக்கானார்.

கொரோனா பாதித்தவர்களுக்காக தன்னுடைய அறக்கட்டளை சார்பாக அவர் நிதி திரட்டி வருகிறார். 100 ரூபாவுக்கு மேல் யார் வேண்டுமானாலும் நிதி தரலாம் என்று அவர் கூறியிருந்தார்.

இந்நிலையில் தற்போது அவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனவும் தகவல் வெளியாகியுள்ளது. இந்தத் தகவல் சமூக வலைதளங்களில் வேகமாகப் பரவி வருவதையடுத்து, திரையுலகினர் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

இதனையடுத்து பாடகர் எஸ்.பி.பாலசுப்பிரமணியம் தனக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார். அந்த வீடியோவில் தனக்கு சில அறிகுறிகள் தென்பட்டதையடுத்து மருத்துவ பரிசோதனையில் கொரோனா தொற்று உறுதியாகியிருப்பதாக அவர் கூறியுள்ளார். இருப்பினும்தனது உடல்நிலை சீராக இருப்பதாகவும் அந்த பதிவில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# வெளிநாடுகளில் இருந்து திரும்பிய 16,000 பேர் தேர்தலில் வாக்களிப்பு

கொரோனா தொற்றுக் காரணமாக வெளிநாட்டில் சிக்கித்தவித்த பின்னர் நாடு திரும்பிய 19,000 இலங்கையர்களில் சுமார் 16,000 பேர் இன்றைய பொதுத் தேர்தலில் வாக்களிப்பதற்கான வாய்ப்பைப் பெற்றுள்ளார் என ஜனாதிபதியின் மேலதிக செயலாளர், அட்மிரல் ஜயநாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

மேலும் கொரோனா தொற்று காரணமாக சீனாவின் வுஹானில் கல்வி கற்றுவந்த இலங்கை மாணவர்களின் குழுவை அரசாங்கம் பெப்ரவரி முதலாம் திகதி நாட்டுக்கு அழைத்து வந்தனர் எனக் கூறினார்.

பின்னர் எடுக்கப்பட்ட ஒரு முடிவைத் தொடர்ந்து, மார்ச் 19 ஆம் திகதி புலம்பெயர் தொழிலாளர்களும் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டனர் என்றும் ஜயநாத் கொலம்பகே சுட்டிக் காட்டியுள்ளார்.

இதேவேளை கொரோனா தொற்றுக் காரணமாக வெளிநாடுகளில் சிக்கித் தவிக்கும் 40,000க்கும் மேற்பட்ட இலங்கையர்கள் நாடு திரும்பக் காத்திருக்கிறார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.

# லெபனான் பெருவெடிப்பில் இலங்கைத் தூதரகமும் சேதம்

## இலங்கையர் ஒருவர் காயம்

லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் நேற்றிரவு இடம்பெற்ற பாரிய வெடிப்புச் சம்பவங்களின்போது அங்குள்ள இலங்கைத் தூதரகம் சேதமடைந்துள்ளது.

தூதரக அதிகாரிகள் பலரது வீடுகளும் சேதமடைந்திருக்கின்றன என அறிவிக்கப்படுகின்றது.

இச் சம்பவத்தில் இலங்கைப் பிரஜை ஒருவரும் காயமடைந்திருக்கின்றார். இலங்கையர்கள் மேலும் யாராவது காயமடைந்துள்ளார்களா என்பதையிட்டு தூதரகம் ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# வாக்குச் சீட்டை படம் எடுத்த இளைஞர் கைது

தேர்தல் சட்ட விதிமுறைகளை மீறி வாக்குச்சீட்டைக் கையடக்கத் தொலை பேசியில் ஒளிப்படம் எடுத்த இளைஞரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இன்று காலை நாவலபிட்டிய - இம் புல்பிட்டிய பகுதியைச் சேர்ந்த இளைஞரே (32 வயது) இந்தச் சம்பவத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

நாவலப்பிட்டிய மத்திய கல்லூரியிலுள்ள வாக்குச் சாவடியிலேயே இந்த இளைஞன், வாக்குச் சீட்டைத் தமது கையடக்கத் தொலைப்பேசியில் ஒளிப்படம் எடுத்தார் என்ற குற்றச்சாட்டில் தேர்தல் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த அதிகாரிகள் பிடித்து, பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

சந்தேகநபரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை நாவலப்பிட்டிய பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# வாக்களிக்க வந்தவர் திடீரென உயிரிழப்பு

பாணந்துறை, பெக்கேகம மஹா வித்தியாலயத்துக்கு வாக்களிப்பதற்காக வருகைத் தந்தவர் திடீரென சுகயீனமுற்றதைத் தொடர்ந்து வைத்தியசாலையில் அனுமதித்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் பாணந்துறை சேர்ந்த 80 வயதான ஒருவரே உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனால் அந்த வாக்களிப்பு நிலையத்தில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டதாகவும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

# வாக்களித்து விட்டு புறப்பட்டவருக்கு குளவி கொட்டு

வெலிமட – குருத்தலாவ புனித தாமஸ் கல்லூரியிலுள்ள வாக்குச் சாவடியில் வாக்களிக்க வந்திருந்த ஒருவர், குளவி கொட்டுக்கு இலக்காகி காயமடைந்துள்ளனர்.

இன்று காலை இடம்பெற்ற இந்த சம்பவத்தில் குருத்தலாவ பகுதியைச் சேர்ந்த 53 வயதான ஒருவரே காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த நபர் வாக்களித்துவிட்டு, வீடு திரும்பிச் செல்லும்போதே குளவி கொட்டுக்கு இலக்காகினார் எ போகாஹகும் புரா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# கொரோனாத் தொற்றுக்குள்ளான மேலும் 13 பேர் குணமடைந்தனர்

கொழும்பு, ஓக.05

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் 13 பேர் பூரணமாக குணம் அடைந்து வீடு திரும்பியுள்ளனர் என சுகாதார அமைச்சுத் தெரிவித்துள்ளது.

அதன்படி, 2537 பேர் முழுவதுமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர் எனவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 2,834 ஆக அதிகரித்துள்ளது.

தற்போது, 286 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சைப் பெற்று வரும் நிலையில் இதுவரை 11 கொரோனா நோயாளர்கள் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தேர்தல் களங்களும் வென்ற கட்சிகளும்!

1947 முதல் 2015 வரை இலங்கையில் நடைபெற்றுள்ள 15 நாடாளுமன்றத் தேர்தல்களில் ஐக்கிய தேசியக் கட்சி 08 தேர்தல்களிலும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான கூட்டணி 07 தேர்தல்களிலும் வெற்றி பெற்று அரியணையேறியுள்ளன.

பிரதான இரு அரசியல் கட்சிகளுள் ஒன்றாக விளங்கிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியானது 68 ஆண்டுகளுக்கு பின்னர் – தலைமை வழங்கும் அந்தஸ்தை இழந்து, புதிதாக உதயமான கட்சியுடன் கூட்டணி அமைத்து இம்முறை பொதுத்தேர்தலில் போட்டியிட்டுள்ளது.

நுவரெலியா, களுத்துறை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் மட்டும் தனது சொந்தச் சின்னத்தில் (கை) அக்கட்சி போட்டியிட்டுள்ளது.

அதேபோல் ஐக்கிய தேசியக் கட்சியும் இரு அணிகளாகப் பிளவுபட்டே தேர்தலை எதிர்கொண்டுள்ளது. ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அணி 'யானை' சின்னத்திலும், சஜித் பிரேமதாஸா தலைமையிலான தரப்பு 'தொலைபேசி' சின்னத்திலும் களம் கண்டுள்ளன.

ஐ.தே.க. உறுப்பினர்களில் பெரும்பாலானவர்கள் சஜித் பக்கமே நிற்கின்றனர். அக்கட்சியுடன் கூட்டணி வைத்திருந்த பங்காளிகளும் ரணிலைக் கைவிட்டு சஜித்துடன் சங்கமித்தே பொதுத்தேர்தலை எதிர்கொண்டுள்ளனர்.

அதேவேளை, உள்ளூராட்சி சபைகள் மற்றும் ஜனாதிபதித் தேர்தல்களில் முதல் தடவையாக போட்டியிட்ட ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி இரண்டிலும் அமோக வெற்றியைப் பெற்றுள்ள நிலையில், பொதுத்தேர்தலிலும் மூன்றிலிரண்டு பெரும்பான்மை இலக்கைக் குறிவைத்துள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியும் கூட்டணி அமைத்து தேசிய மக்கள் சக்தியாக பொதுத்தேர்தலை எதிர்கொண்டுள்ளது.

முதலாவது பொதுத்தேர்தல்

குறிப்பாக 1947 முதல் 1977 வரை தொகுதி அடிப்படையிலேயே பொதுத்தேர்தல் நடைபெற்ற நிலையில் 1978 இற்கு பிறகே விகிதாசாரமுறை அறிமுகப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் 1947 இல் நடைபெற்ற முதலாவது பொதுத்தேர்தலில் அமரர். டிஸ். சேனாநாயக்க தலைமையிலான ஐக்கிய தேசியக்கட்சியே வெற்றிபெற்றது.

1952 இல் நடைபெற்ற இரண்டாவது பொதுத்தேர்தலிலும் ஐக்கிய தேசியக்கட்சியே வெற்றிநடைபோட்டது.

1956 இல் நடைபெற்ற 3ஆவது பொதுத் தேர்தலில் அமரர். எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வெற்றிபெற்றது. புதிய கட்சியை ஆரம்பித்து நான்கரை வருடங்களிலேயே அவர் ஆட்சியைப் பிடித்தார்.

1960 மார்ச் 19 ஆம் திகதி நடைபெற்ற இலங்கையின் நான்காவது பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியே அதிக ஆசனங்களைக் கைப்பற்றியது.

1947, 1952, 1956ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற பொதுத்தேர்தலின்போது தேர்தல் திகதியாக மூன்றுக்கும் மேற்பட்ட நாள்கள் அறிவிக்கப்பட்டன.

1960இல் நடைபெற்ற பொதுத்தேர்தலின்போதே ஒரே நாளில் வாக்களிக்கும் நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டது.

இதற்கு முன்னர் நடைபெற்ற மூன்று தேர்தல்களிலும் 95 பேர் வாக்களிப்பு ஊடாகவும், அறுவர் நியமன உறுப்பினர்களாகவும் தெரிவுசெய்யப்பட்டனர். சபையில் மொத்தம் 101 உறுப்பினர்கள் அங்கம் வகித்தனர்.

எனினும், 1959 இல் தொகுதிகளை நிர்ணயிப்பதற்காக நியமிக்கப்பட்ட குழு, இலங்கையை 145 தேர்தல் தொகுதிகளாக நிர்ணயித்தது.

இதில் 140 தொகுதிகள் தனி அங்கத்துவ தொகுதிகளாகவும், நான்கு தொகுதிகள் இரட்டை அங்கத்துவ தொகுதிகளாகவும், மத்திய கொழும்பு மூன்று அங்கத்துவ தொகுதியாகவும் வரையறுக்கப்பட்டது. நியமன உறுப்பினர்களின் எண்ணிக்கை 6ஆக நீடித்தது.

இதன்படி மொத்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 101 இலிருந்து 157 ஆக அதிகரித்தது.

இலங்கையில் 5ஆவது பொதுத்தேர்தல் 1960 ஜீலை 20 ஆம் திகதி தேர்தல் நடத்தப்பட்டது. இதில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வெற்றிபெற்றது.

1970 இல் நடைபெற்ற இலங்கையின் 6ஆவது நாடாளுமன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பெற்றிபெற்றது.

1977 இல் நடைபெற்ற 7ஆவது பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் அரியணையேறியது. இலங்கை நாடாளுமன்றத் தேர்தல் வரலாற்றில் இதுவே வரலாற்று வெற்றியாக கருதப்படுகின்றது.

சர்வஜன வாக்கெடுப்பு மூலம் நாடாளுமன்றத்தின் ஆயுட்காலம் மேலுமொரு தவணைக்கு நீடிக்கப்பட்டதால் 8ஆவது பொதுத்தேர்தல் 1989இல்தான் நடைபெற்றது. இதில் ரணசிங்க பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி வெற்றிபெற்றது.

அதன்பின்னர் 1994 ஆகஸ்ட் 16 ஆம் திகதி நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான மக்கள் கூட்டணி வெற்றிபெற்று, ஐக்கிய தேசியக் கட்சியின் 17 ஆண்டுகால ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்தது.

2000இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் சந்திரிக்கா தலைமையிலான கூட்டணியே வெற்றிபெற்றது.எனினும், 11 மாதங்களில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு, பொதுத்தேர்தலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

2001 டிசம்பர் 05 ஆம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெற்றது. 2001 டிசம்பர் 09 ஆம் திகதி ரணில் பிரதமரானார். 2004 ஏப்ரல் 2 ஆம் திகதிவரை பதவியில் நீடித்தார்.

2004 ஏப்ரல் 02 ஆம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலில் சந்திரிகா தலைமையிலான மக்கள் கூட்டணி வெற்றிபெற்றது.

2010 ஜனவரியில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிநடைபோட்டு 2 ஆவது முறையும் அரியணையேறிய மஹிந்த ராஜபக்ஷ, அதே ஆண்டு ஏப்ரல் 8 ஆம் திகதி பொதுத் தேர்தலை நடத்தவும் நடவடிக்கை எடுத்தார்.

அத்தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அணிக்கே அமோக வெற்றி கிடைத்தது. 144 ஆசனங்களுடன் மீண்டும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சி மலர்ந்தது.

2015 இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி வெற்றிபெற்றது. இந்தத் தேர்தலில் 106 ஆசனங்களைக் கைப்பற்றி வெற்றிபெற்ற ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து தேசிய அரசு அமைத்தது.

இந்தநிலையிலேயே 9 ஆவது நாடாளுமன்றத்துக்கான உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கான தேர்தல் இன்று நடைபெற்றது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.08.2020 இல் வெளியிடப்பெற்றது.